செ.வெ.எண்: 388 நாள்: 25.06.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் இரண்டு பெண் குழந்தைகளுக்கான வைப்பீடு செய்யப்பட்ட முதிர்வு தொகையினை பயனாளிகள் பெற்றுக்கொள்ளலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட சமூக நலத் துறையில், இரண்டு பெண் குழந்தைகளுக்கான வைப்பீடு செய்யப்பட்ட முதிர்வு தொகையினை பயனாளிகள் பெற்றுக்கொள்ளலாம். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூக நலத் துறையின் மூலம் செயல்படும் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் 1997 முதல் 2001 வரை விண்ணப்பித்த பயனாளிகளுக்கு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மூலம் வைப்பீடு செய்யப்பட்ட பயனாளிகள் அனைவருக்கும் 18 வயது பூர்த்தி அடைந்துவிட்டதால் இரண்டு பெண் குழந்தைகளுக்கான வைப்பீடு செய்யப்பட்ட முதிர்வு தொகையினை பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து பயனாளிகளும் முதிர்வுத் தொகையினை பெறுவதற்கு தங்களிடம் உள்ள ஆவணங்களான வைப்பு தொகை ரசீது நகல், பத்தாம் வகுப்பு தேர்ச்சிக்கான மதிப்பெண் சான்றிதழ், வங்கி கணக்கு புத்தக நகல், பயனாளியின் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் இரண்டு ஆகிய சான்றுகளுடன் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் நேரில் சமர்ப்பித்து இரண்டு பெண் குழந்தைகளுக்கான வைப்பீடு செய்யப்பட்ட முதிர்வு தொகையினை பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**